Tractors and Farm Equipment Limited
77, Nungambakkam High Road
Chennai - 600 034, India
T: +91 44 6691 9000
tafe.com

# TAFE Contributes ₹ 3 Crores Towards TN Chief Minister's Flood Relief Fund



**Chennai, India | December 8, 2015:** In the aftermath of the recent floods in Chennai and other parts of Tamil Nadu which affected thousands of families, Ms. Mallika Srinivasan, Chairman and CEO, TAFE, personally handed over a cheque for ₹3 crores to the Honourable Chief Minister of Tamil Nadu, Ms. J. Jayalalithaa towards the Chief Minister's Flood Relief Fund.

Additionally, TAFE has initiated efforts amongst its employees to help in rehabilitation for people affected by the floods. TAFE's CSR focuses on healthcare, educational support for children, skill training and, research and technical support to the farming community.

### வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண நிதி வழங்குவதற்காக

# 4 மாவட்டங்களில் கணக்கெடுப்பு தொடங்கியது

## பணிகளை கண்காணிக்க அதிகாரிகள் நியமனம்

**சென்னை**

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா ரூ.5 ஆயிரமும், குடிசைகளை இழந்தவர்களுக்கு தலா ரூ.10 ஆயிரமும் நிவாரண நிதியாக வழங்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருந்தார். இதையடுத்து சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் வெள்ள பாதிப்பு குறித்த கணக்கெடுப்பு தொடங்கியுள்ளது.

தமிழகத்தில் சில நாட்களுக்கு முன்பு பெய்த கனமழையால் கடலூர் மாவட்டம் கடுமையாக பாதிக்கப்பட்டது. அங்கு தற்போது மீண்டும் மழை பெய்து வருகிறது. இதற்கிடையே, கடந்த வாரம் பெய்த கனமழையால் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்கள் வரலாறு காணாத அளவில் கடுமையாக பாதிக்கப்பட்டன. சென்னை நகரமே வெள்ளத்தில் தத்தளித்தது. ஆயிரக்கணக்கானோர் வீடு, உடைமைகளை இழந்தனர். சென்னை பேரிடர் பகுதியாகவே அறிவிக்கப்பட்டு மீட்புப் பணிகள் தற்போதுவரை தொடர்கின்றன.



▲ முதல்வர் பொது நிவாரண நிதிக்கு, டி.வி.எஸ். மோட்டார் நிறுவனத்தின் தலைவர் வேணு ஸ்ரீனிவாசன் ரூ.5 கோடிக்கான காசோலையையும், டாஃபே நிறுவனத்தின் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் மல்லிகா ஸ்ரீனிவாசன் ரூ.3 கோடிக்கான காசோலையையும் முதல்வர் ஜெயலலிதாவிடம் வழங்கினர்.

இந்நிலையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடிசை வீடுகளுக்கு ரூ.10 ஆயிரம், மற்றவர்களுக்கு ரூ.5 ஆயிரம் நிவாரணத் தொகை, 10 கிலோ அரிசி, ஒரு வேட்டி, சேலை ஆகியவை வழங்கப்படும் என்றும், நிவாரணத் தொகை வங்கிக்கணக்கில் சேர்க்கப்படும் என்றும் நேற்று முன்தினம் முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். பயிர்கள், கால்நடைகளுக்கான நிவாரணத் தொகைகளையும் அறிவித்தார்.

முதல்வரின் அறிவிப்பைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கணக்கெடுப்பு பணி தொடங்கியுள்ளது. 4 மாவட்டங்களிலும் இதற்கென அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு அரசின் வழிகாட்டுதல்படி கணக்கெடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் கணக்கெடுப்பு பணியை கண்காணிக்க, தொல்லியல் துறை ஆணையர் டி.கார்த்திகேயன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழக மேலாண் இயக்குநர் மைதிலி கே.ராஜேந்திரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர், துணை ஆட்சியர் நிலையில் பணியமர்த்தப்பட்டுள்ள வெள்ள நிவாரண கணக்கெடுப்பு அலுவலர்களுடன் நேற்று ஆலோசனை நடத்தினர். அப்போது, அரசு வழிகாட்டுதல்படி கணக்கெடுப்பு பணியை மேற்கொள்ள வேண்டும். பணி அறிக்கையை தினமும் சமர்ப்பிக்க வேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதேபோல காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மாவட்டங்களிலும் வெள்ள பாதிப்பு கணக்கெடுப்புப் பணி தொடங்கியுள்ளது. இதற்கிடையே, சென்னை புறநகர் பகுதிகளில் உள்ள கவுன்சிலர்கள், வெள்ளம் பாதித்த பகுதிகளில் வீடு வீடாகச் சென்று ரேஷன் அட்டை நகல், குடும்பத் தலைவரின் வங்கிக்கணக்கு புத்தக நகல் போன்றவற்றை பெற்று வருகின்றனர்.

கணக்கெடுப்புப் பணி முடிந்ததும் நிவாரணத் தொகை, பயனாளிகளின் வங்கிக்கணக்கில் சேர்க்கப்படும். மேலும் அரிசி, வேட்டி, சேலை ஆகியவை அந்தந்த பகுதி ரேஷன் கடைகள் மூலம் வழங்கப்படும்.

### 17 லட்சம் பேர் மீட்பு

இதுவரை நடந்த நிவாரணப் பணிகள் தொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

வெள்ளம் பாதித்த பகுதிகளில் இருந்து இதுவரை 16 லட்சத்து 97 ஆயிரத்து 565 பேர் மீட்கப்பட்டு நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 6,081 நிவாரண மையங்கள் திறக்கப்பட்டுள்ளன. முகாம்களில் இருக்கும் மக்களுக்கு ஒரு கோடியே 13 லட்சத்து 69 ஆயிரத்து 617 உணவுப் பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

சுகாதாரத் துறை சார்பில் நடத்தப்பட்ட 25,551 மருத்துவ முகாம்களில் 24 லட்சத்து 68 ஆயிரத்து 441 பேர் பயன்பெற்றுள்ளனர்.

## முதல்வர் நிதிக்கு ஒரே நாளில் ரூ.22 கோடி

தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்காக முதல்வர் பொது நிவாரண நிதிக்கு, முதல்வர் ஜெயலலிதாவிடம் தலைமைச் செயலகத்தில் பலர் நேற்று நிதியுதவி வழங்கினர்.

டிவிஎஸ் மோட்டார் நிறுவன தலைவர் வேணு ஸ்ரீனிவாசன், மாதா அமிர்தானந்தமயி மடத்தின் அறங்காவலர் சுவாமி ராமகிருஷ்ணானந்தா புரி தலா ரூ.5 கோடியும் 'டாஃபே' நிறுவன தலைவர் மல்லிகா ஸ்ரீனிவாசன், ஜாய் ஆலுக்காஸ் நிறுவன தலைவர் ஜாய் ஆலுக்காஸ் தலா ரூ.3 கோடியும் வழங்கினர். இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவன துணைத் தலைவர் என்.சீனிவாசன், ஹூண்டாய் மோட்டார் நிறுவன மேலாண் இயக்குநர் ஒய்.கே.கூ ஆகியோர் தலா ரூ.2 கோடி, ஸ்டேட் வங்கி முதன்மை பொது மேலாளர் பி.ரமேஷ் பாபு, சிட்டி யூனியன் வங்கி மேலாண் இயக்குநர் என்.காமகோடி தலா ரூ.1 கோடியும் வழங்கினர். முதல்வரிடம் நேற்று ஒரே நாளில் ரூ.22 கோடி பொது நிவாரண நிதிக்கு அளிக்கப்பட்டுள்ளது.

The Hindu – Tamil | December 09, 2015

# उद्योग घरानों ने की 22 करोड़ रुपये की मदद

**बीएस संवाददाता**
चेन्नई, 8 दिसंबर

**तमिलनाडु** की बाढ़ राहत गतिविधियों में उद्योग घरानों और बैंक सहित वित्तीय संस्थानों ने 22 करोड़ रुपये की मदद की है। टीवीएस मोटर, इंडिया सीमेंट्स, हुंडई मोटर और भारतीय स्टेट बैंक ने आज इस कोष में योगदान किया।

राज्य सरकार की ओर से जारी बयान के अनुसार, इन कंपनियों के शीर्ष अधिकारियों ने मुख्यमंत्री जयललिता को अलग-अलग रकम के चेक सौंपे। टीवीएस मोटर के चेयरमैन वेणु श्रीनिवासन ने इस कोष में 5 करोड़ रुपये जमा कराए और मां अमृतानंदमयी मठ ने भी इतनी ही रकम का योगदान किया। टैफे की मल्लिका श्रीनिवासन ने इस कोष में 3 करोड़ रुपये का योगदान किया। इसी प्रकार प्रमुख ज्वैलर जॉय अलुक्कास ने भी 3 करोड़ रुपये का चेक सौंपा। बयान के अनुसार, इंडिया सीमेंट्स के वाइस चेयरमैन एन श्रीनिवासन ने 2 करोड़ रुपये और हुंडई मोटर के प्रबंध निदेशक वाईके कू ने भी 2 करोड़ रुपये के चेक दिए। भारतीय स्टेट बैंक ने 1 करोड़ रुपये और सिटी यूनियन बैंक ने भी 1 करोड़ रुपये का योगदान किया।

Business Standard | December 09, 2015

# नुकसान के बावजूद पीड़ितों की मदद

## ▶ कारपोरेट जगत ने अब तक किया 300 करोड़ रुपए की मदद का ऐलान

**चेन्नई (एजेंसियां)।** तमिलनाडु में भारी बारिश से पैदा हुए बाढ़ के हालात से कारपोरेट जगत को भी भारी नुकसान हुआ है लेकिन इसके बावजूद उसने पीड़ितों की मदद के लिए बड़े पैमाने पर काम वित्तीय सहायता उपलब्ध कराई है। कंपनियों, बैंकों, स्वयंसेवी संगठनों और वित्तीय संस्थानों ने बाढ़ पीड़ितों को लगभग लगभग 300 करोड़ रुपए की मदद का ऐलान किया है। जबकि कई अन्य कंपनियों व संस्थाओं की तरफ से भी भारी मदद आने की उम्मीद है।

कारपोरेट जगत की प्रमुख कंपनियों टीवीएस मोटर्स, इंडिया सीमेंट्स, हुंडई मोटर इंडिया लि. तथा स्टेट बैंक समेत विभिन्न कंपनियां तथा बैंकों ने तमिलनाडु में बाढ़ राहत गतिविधियों में कुल 22 करोड़ रुपए का योगदान किया है। सरकारी बयान के अनुसार कंपनियों के शीर्ष अधिकारियों ने विभिन्न राशि के चेक मुख्यमंत्री को सौपे। टीवीएस मोटर के चेयरमैन वेणु श्रीनिवासन तथा माता अमृतानंदमयी मठ ने 5-5 करोड़ रुपए का योगदान किया जबकि टीएएफई तथा आभूषण निर्माता जॉय अलुक्कास ने 3-3 करोड़ रुपए के चेक दिए। बयान के मुताबिक इंडिया सीमेंट्स के एन श्रीनिवासन तथा एचएमआईएल के प्रबंध निदेशक वाईकि कू ने 2-2 करोड़ रुपए जबकि एसबीआई तथा सिटी यूनियन बैंक ने एक-एक करोड़ रुपए के चेक दिए।

उधर आईटी क्षेत्र की दिग्गज कंपनी काग्निजेंट ने बाढ़ ग्रस्त चेन्नई में राहत एवं पुनर्वास कार्यों के लिए 4 करोड़ डालर (260 करोड़ रुपए) खर्च करने की प्रतिबद्धता जताई है। काग्निजेंट इस क्षेत्र में सबसे बड़ी नियोक्ताओं में से एक है और कंपनी की 11 इकाइयों में 60,000 कर्मचारियों की भर्ती कर रही है। कंपनी ने एक बयान में कहा, 'प्रस्तावित 4 करोड़ डालर खर्च के तहत काग्निजेंट एक करोड़ डालर मुख्यमंत्री सार्वजनिक राहत कोष एवं एनजीओ को देगी जिससे चेन्नई के निवासियों की मदद के लिए धन उपलब्ध कराया जा सके।

उधर आइशर मोटर्स ने कहा कि उसे चेन्नई में भारी बारिश और बाढ़ के कारण अब तक 11,200 रायल एनफील्ड मोटरसाइकिल के उत्पादन का नुकसान हुआ है। आयशर मोटर्स लिमिटेड ने नियामकीय जानकारी में बताया, 'चेन्नई में भारी बारिश और बाढ़ के कारण तिरवोट्टियुर और ओरागादाम के दोनों संयंत्र एक दिसम्बर 2015 से बंद थे।' आयशर मोटर्स ने कहा, 'कंपनी का उत्पादन सात दिसम्बर 2015 को फिर से शुरू हुआ।' अमेरिकी कार कंपनी फोर्ड ने कहा कि उसने चेन्नई के समीप मराईमलाई नागर इंजन एसेंबली इकाई में कामकाज फिर से शुरू कर दिया है। कंपनी ने कहा कि वाहन एसेंबली गतिविधियां अभी बंद रहेंगी। जब तक टीम कारखाने, नुकसान तथा आपूर्तिकर्ताओं पर बारिश के प्रभाव का आकलन नहीं कर लेती, काम शुरू नहीं किया जाएगा।




- कंपनियों के अलावा स्वयंसेवी संगठन भी दे रहे हैं मदद
- आटो कंपनियों व बैंकों ने दिए 22 करोड़
- आईटी दिग्गज काग्निजेंट ने दी 260 करोड़ रुपए की मदद

Rashtriya Sahara | December 09, 2015

வெள்ள நிவாரணம்

## முதல்வரிடம் ஒரேநாளில் குவிந்த ரூ.22 கோடி

**சென்னை, டிச. 8:** வெள்ள நிவாரண நிதிக்காக, முதல்வர் ஜெயலலிதாவிடம் ரூ.22 கோடி நிதியுதவி செவ்வாய்க்கிழமை நேரில் அளிக்கப்பட்டது.

மழை-வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம்-மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்ள முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு நிதியுதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதாவை செவ்வாய்க்கிழமை நேரில் சந்தித்து, முக்கிய பிரமுகர்கள் நிதியுதவி அளித்தனர்.

டி.வி.எஸ். மோட்டார் நிறுவனத்தின் தலைவர் வேணு சீனிவாசன், சத்குரு மாதா அம்ரிதானந்தமயி தேவி சார்பில் மடத்தின் அறங்காவலர் ராமகிருஷ்ணாநந்தாபுரி ஆகியோர் தலா ரூ.5 கோடியும், டாபே நிறுவனத்தின் தலைவர்-முதன்மைச் செயல் அலுவலர் மல்லிகா சீனிவாசன், ஜாய் ஆலுகாஸ் நிறுவனத்தின் தலைவர்-நிர்வாக இயக்குநர் ஜாய் ஆலுகாஸ் ஆகியோர் தலா ரூ.3 கோடியையும் அளித்தனர்..

இந்தியா சிமென்ட்ஸ் நிறுவத்தின் துணைத் தலைவர்-நிர்வாக இயக்குநர் என்.சீனிவாசன், ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஒய்.கே.கூ ஆகியோர் தலா ரூ.2 கோடியும், பாரத ஸ்டேட் வங்கி இந்தியாவின் முதன்மைப் பொது மேலாளர் பி.ரமேஷ் பாபு, சிட்டி யூனியன் வங்கி நிர்வாக இயக்குநர்-முதன்மைச் செயல் அலுவலர் என்.காமகோடி ஆகியோர் தலா ரூ.1 கோடியும் அளித்தனர்.

இதன்படி, ஒரே நாளில் ரூ.22 கோடி அளிக்கப்பட்டுள்ளது என தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Dina Mani | December 09, 2015

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக

## தமிழக தொழிலதிபர்கள் ஜெயலலிதாவை சந்தித்து ₹22 கோடி நிதி வழங்கினர்

**சென்னை, டிச. 9:** தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவி அளிக்க விரும்புபவர்கள், முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்காக வழங்கலாம் என்று முதல்வர் ஜெயலலிதா நேற்று முன்தினம் அறிவித்தார். இதையடுத்து பல தொழிலதிபர்கள் ஜெயலலிதாவை நேற்று தலைமை செயலகத்தில் சந்தித்து ₹22 கோடி நிதி அளித்தனர்.

இது குறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

முதல்வர் ஜெயலலிதாவிடம் நேற்று தலைமை செயலகத்தில், தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு பணிகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு கீழ்க்கண்டவர்கள் நிதியுதவி வழங்கினார்கள்.

★ டி.வி.எஸ். மோட்டார் நிறுவனத்தின் தலைவர் வேணு ஸ்ரீனிவாசன் 5 கோடி ரூபாய்.

★ சத்குரு ஸ்ரீ மாதா அம்ரிதாநந்தமயி தேவி சார்பில், மாதா அம்ரிதாநந்தமயி மடத்தின் அறங்காவலர் சுவாமி ராமகிருஷ்ணாநந்தா புரி 5 கோடி ரூபாய்.

★ டாபே லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் மல்லிகா ஸ்ரீனிவாசன் 3 கோடி ரூபாய்.

★ ஜாய் ஆலுகாஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஜாய் ஆலுகாஸ் 3 கோடி ரூபாய்.

★ இந்தியாசிமெண்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் துணை தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் என். சீனிவாசன் 2 கோடி ரூபாய்.

★ ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஓய்.கே. கூ 2 கோடி ரூபாய்.

★ ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் முதன்மை பொது மேலாளர் பி.ரமேஷ் பாபு அவர்கள் 1 கோடி ரூபாய்.

★ சிட்டி யூனியன் பாங்க் லிமிடெட் மேலாண்மை இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் டாக்டர் என். காமகோடி 1கோடி ரூபாய்.

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக மொத்தம் 22 கோடி ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நேற்ற அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Dina Karan | December 09, 2015

# முதல்-அமைச்சர் பொது நிவாரண நிதிக்கு

# முதல் நாளில் ரூ.22 கோடி குவிந்தது

## ஜெயலலிதாவிடம் நேரில் வழங்கினார்கள்

வெள்ள மீட்பு நடவடிக்கைக்காக முதல்-அமைச்சர் பொது நிவாரண நிதிக்கு முதல் நாளான நேற்று ரூ.22 கோடி குவிந்தது. ஜெயலலிதாவிடம் தொழில் அதிபர்கள் நேரில் வழங்கினார்கள்.

சென்னை, டிச.9-

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிதி வழங்கலாம் என்று முதல்-அமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் அறிவித்தார்.

அதைத்தொடர்ந்து முதல்-அமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு பலர் நிதி வழங்கி வருகின்றனர்.

### ஜெயலலிதாவிடம் நேரில் வழங்கினர்

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது;-

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக முதல்-அமைச்சர் ஜெயலலிதாவிடம் நேற்று, தலைமைச்செயலகத்தில் பலர் முதல்-அமைச்சரின் பொது நிவாரண நிதி வழங்கினர். அதன் விவரம்:-

### மாதா அமிர்தானந்தமயி

டி.வி.எஸ். மோட்டார் நிறுவனத்தின் தலைவர் வேணு சீனிவாசன் 5 கோடி ரூபாய்; ஸ்ரீ மாதா அமிர்தானந்தமயி தேவி சார்பில், மாதா அமிர்தானந்தமயி மடத்தின் அறங்காவலர் ராமகிருஷ்ணாநந்தா புரி 5 கோடி ரூபாய்;

டி.ஏ.எப்.இ லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் மல்லிகா சீனிவாசன் ரூ.3 கோடி;

ஜாய் ஆலுகாஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் ஜாய் ஆலுகாஸ் ரூ.3 கோடி;

### வங்கிகள்

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் என்.சீனிவாசன் ரூ.2 கோடி;

ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் ஒய்.கே.கூ. 2 கோடி ரூபாய்;

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் முதன்மை பொதுமேலாளர் பி.ரமேஷ் பாபு ரூ.1 கோடி; சிட்டி யூனியன் பாங்க் லிமிடெட் மேலாண்மை இயக்குனர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் டாக்டர் என்.காமகோடி ரூ.1 கோடி.

### ரூ.22 கோடி

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக முதல்நாளில் மொத்தம் ரூ.22 கோடி முதல்-அமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Dina Thanthi | December 09, 2015

# வெள்ள நிவாரண நிதி வசூல் ரூ.22 கோடி

சென்னை, டிச. 9-

'விருப்பம் உள்ளவர்கள், வெள்ள நிவாரண நிதி வழங்கலாம்' என, முதல்வர் ஜெயலலிதா அறிவித்ததை தொடர்ந்து, நேற்று, எட்டு நிறுவனங்களின் தலைவர்கள், முதல்வர் ஜெயலலிதாவிடம், 22 கோடி ரூபாயை அளித்தனர்.

| நிதி அளித்தவர்கள் | தொகை [ரூ.கோடியில்] |
|---|---|
| வேணு சீனிவாசன், டி.வி.எஸ்., மோட்டார் நிறுவனத் தலைவர் | 5 |
| ராமகிருஷ்ணானந்தா புரி, ஸ்ரீமாதா அமிர்தானந்தமயி மடம் அறங்காவலர் | 5 |
| மல்லிகா சீனிவாசன், 'டபே லிமிடெட்' நிறுவனத் தலைவர் | 3 |
| ஜாய் ஆலுகாஸ், 'ஜாய் ஆலுகாஸ்' நிறுவனத் தலைவர் | 3 |
| சீனிவாசன், இந்தியா சிமென்ட்ஸ் நிறுவன துணைத் தலைவர் | 2 |
| ஒய்.கே.கூ, ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவன மேலாண் இயக்குனர் | 2 |
| ரமேஷ்பாபு, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா முதன்மை பொது மேலாளர் | 1 |
| காமகோடி, சிட்டி யூனியன் பாங்க் மேலாண் இயக்குனர் | 1 |

Dina Malar | December 09, 2015

# India Inc loosens purse strings to help flood victims

**Chennai:** IT major Cognizant has committed $40 million (Rs 260 crore) to undertake relief and rehabilitation to the flood-hit Chennai. It is one of the largest employers in the region recruiting more than 60,000 at its 11 facilities.

"Under the proposed $40 million, Cognizant would allocate $10 million of funding to help the residents of Chennai through chief minister's Public Relief Fund and NGOs and also through other charitable and relief organisations", Cognizant said.

Various other corporate houses and banks including TVS Motors, India Cements, Hyundai Motor India Limited and State Bank of India on Tuesday contributed a total of Rs 22 crore towards flood-relief activities in the state, the Tamil Nadu government said.

Venu Srinivasan, chairman, TVS Motor and Mata Amritnandamayi Mutt contributed Rs 5 crore each while Mallika Srinivasan of TAFE and Joy Alukkas, a popular jeweller, presented cheques of Rs 3 crore each, it said. India Cements' N Srinvasan and HMIL MD YK too gave Rs 2 crore each while SBI and City Union Bank contributed Rs 1 crore each, the government said. —PTI

DNA | December 09, 2015

# HELPING HAND



*TVS Motor Company chairman Venu Srinivasan presented Rs five crore, while TAFE chief Mallika Srinivasan gave away a cheque for Rs three crore for flood relief to Chief Minister J Jayalalithaa at the Secretariat in Chennai today.*

News Today | December 09, 2015